# வட இலங்கையில் பெருங்கற்கால குடியிருப்பு மையங்கள்: கிளிநொச்சி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**சுலக்சிகா, ஜெ. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**Sulaksikajeyanantham@gmail.com**

*தென்னாசியாவில் நீண்ட தொன்மையான தொடர்ச்சியான வரலாற்று பாரம்பரியங்களை கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. இதில் வடஇலங்கையானது தமிழர்களுடைய பாரம்பரிய வரலாற்றினை கொண்டுள்ளதோடு இலக்கியங்களில் இதன் வரலாறானது புகைபடிந்த நிலையிலே காணப்பட்டு வந்த நிலையில் சமகால தொல்லியல் ஆய்வுகள் குறிப்பாக 1970 களின் பின்னரான ஆய்வுகள் தொன்மையான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதோடு தமிழர்களுக்கென பூர்வீக வரலாறு உண்டென்பதை வெளிச்சமிட்டு காட்டுகின்றது. இப் பின்னணியில் இப்பிராந்தியத்தின் பூர்வீக பண்பாட்டுத் தன்மை இருப்பதனை காணமுடிகிறது. வட்டார அடிப்படையில் பெருங்கற்கால பண்பாடு பற்றி பலர் ஆராய்ந்துள்ளனர் ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தினை தனியொரு பிராந்தியமாக கொண்டு இதுவரை ஆராயப்படவில்லை. எனவே பெருங்கற்கால குடியிருப்பு பண்பாட்டு மையங்கள் பற்றி ஆராய்ந்து ஆவணப்படுத்தி இப்பிராந்தியத்திற்கு ஆதிகாலம் முதற்கொண்டு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறுகள் இருப்பதனை வெளிப்படுத்தி இவ் ஆய்வின் மூலம் கிளிநொச்சியின் பூர்வீக மக்கள் தமிழர்கள் என்பதனை எடுத்துக் காட்டுவதும் இவ் ஆய்வின் ஊடாக பெருங்கற்கால பண்பாட்டின் தொடர்ச்சி நிலையினை தற்கால கிளிநொச்சி மாவட்ட மக்கள் இடையேயும் காணக்கூடியதாக உள்ளது. எனவே, அவற்றினை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோடு இவ் ஆய்வினை மேற்கொண்டு தமிழர்களின் பூர்வீக தொன்மை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியற் சான்றுகளை பாதுகாப்பதற்கு எவ்வாறான விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆராய்தல் இவ்வரலாற்றுப் பின்னணியில் வடஇலங்கையானது புராதன காலம் தொட்டு தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்து வருவதனை காணலாம். இதில் கிளிநொச்சி பிராந்தியமானது தனித்து அடையாளப்படுத்தப்படுவதற்கு மனித குடியிருப்புகளின் தொடக்கமே காரண மாகும். குறிப்பாக கிளிநொச்சி பிராந்தியத்தில் இரணைமடு பகுதியில் கற்கால மக்கள் (மேலைப்பழங்கற்காலம்) அவர்களைத் தொடர்ந்து நுண்கற்கால மக்கள் அவர்களை தொடர்ந்து பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளானது நாம் தென்னிந்திய திராவிடவழி வந்த தமிழர்கள் என்பதை அடையாளப்படுத்துவதுடன் இன்று பின்பற்றப்படு கின்ற தமிழர் மொழி, சமய நம்பிக்கைகள் தமிழர் பண்பாடு என்பன அதன் பின்னணியில் திராவிடர் வழி வந்தவர்களையே குறித்து நிற்கின்றது. எனவே கிளிநொச்சி பிராந்தியம் தனித்து அடையாளப்படுத்தப்படுவதற்கு மனித குடியிருப்புகள் அடையாளம் படுத்தப் பட்டமையே வெளிச்சமிட்டுக்காட்டுவதாக பெருங்கற்கால குடியிருப்பு மையங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்வீக மக்களான பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் பரவலாக வாழ்ந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல்*